தமிழ் நாடு

பாதைக் கட்டணம் – அரசு புறம்போக்கு நிலங்களில் குழாய் பதிப்பதற்கு வருவாய் நிலை எண்.24(அ)9(ஒ)–இன்படி விதிக்கப்படும் பாதைக் கட்டணம் – பாசன நீர் எடுத்துச் செல்லுதற்கு வசதியாக விதிக்கப்படும் பாதைக் கட்டணம் ரத்து செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்(நி.நி.5(2)துறை

அரசாணை (நிலை) எண்.202, [illegible] 1120 நாள் 24.4.2000. [illegible] படிக்கவும்.

1. அரசாணை (நிலை) எண்.1002, வருவாய், நாள் 2.12.93.
2. கடிதம் (நிலை) எண்.6, வருவாய், நாள் 2.1.97.
3. அரசாணை (நிலை) எண்.558, வருவாய், நாள் 11.6.97.

ஆணை:–

அரசு புறம்போக்கு நிலங்களில் வழியாக நிலத்தடி குழாய் பதிப்பதற்கு வருவாய் நிலை ஆணை எண்.24(அ)9(ஒ)–இன்படி பாதைக் கட்டணம் (Track rent) விதிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.1002, வருவாய்த்துறை, நாள் 2.12.93–இல் பாதைக்கட்டணம் மறுபரிசீலனை அமைக்கப்பட்டு பின்வருமாறு விதிக்கப்படுகிறது.

வகை	கட்டணம்	ஒன்றுக்குப்பட்சம்
1) கிராம பஞ்சாயத்து	1 கி.மீட்டருக்கு ரூ.200/– 1 மீட்டருக்கு 20 பைசா.	ரூ.25/–
2) நகர பஞ்சாயத்து மற்றும் III ம் நிலை நகராட்சி	1 கி.மீட்டருக்கு ரூ.300/– அல்லது 1 மீட்டருக்கு 30 பைசா	ரூ.50/–
3) நகராட்சி நிலை II மற்றும் அதற்கு மேற்பட்டவை	1 கி.மீட்டருக்கு ரூ.500/– அல்லது 1 மீட்டருக்கு 50 பைசா.	ரூ.100/–
4) மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், ஈரோடு, திருநெல்வேலி.	1 கி.மீட்டருக்கு ரூ.2000/– அல்லது 1 மீட்டருக்கு ரூ.2/–	ரூ.200/–
5) சென்னை	1 கி.மீட்டருக்கு ரூ.3000/– அல்லது 1 மீட்டருக்கு ரூ.3/–	ரூ.300/–

/2/

Verified © RealEstate.com

3. பார்வை 2 மற்றும் 3-ஐில் படிக்கப்பட்ட குடித (நிலை) மற்றும் மாவட்டங்களில் விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் குழாய் பதிக்க அனுமதிப்பது தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயத்திற்காக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லும் பகுதிக்கு விதிக்கப்படும் பாதைக் கட்டணத்தை ரத்து செய்யக் கோரி விவசாய சங்கங்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளனர். இது தொடர்பாக சட்டமன்றப் பேரவையில் 24.3.2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது பின்வருமாறு அறிவித்துள்ளார்கள்:

"விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track rent) ரத்து செய்யப்படும்".

மேற்குறிப்பிட்டுள்ள அறிவிப்புக்கிணங்க, விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக அரசாணை (நிலை) எண்.1002, வருவாய், நாள் 2.12.93-ன்படி விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track rent.) விவசாயிகளைப் பொறுத்தவரையில் ரத்து செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இந்த அரசாணையின்படி, வருவாய் நிலை ஆணை எண்.24(A) 9(e)ல் தரும்த நிருத்தங்கள் கொண்டுவர செயற் முறைப்புகள் அரசுக்கு அனுப்புமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.ட.எண்.1188/நி.செ./தொ./2000, நாள் 11.4.2000-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவேந்திரநாத் சாரங்கி,
அரசின் செயலாளர்.

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
மாநில வங்கியாளர், சென்னை-18/சென்னை-35.
வேளாண்மைத்துறை/பொதுப்பணித்துறை/ஊரகவளர்ச்சித் துறை/நிதித்துறை, சென்னை-9.

நகல்:

இருப்புக் கோப்பு.
உதரி.

/ஆணைப்படி அனுப்பபடுகிறது/

Verified © RedFSate ™